16.04.2026 MCOP No.54/2019

சாட்சி: PW 2 விஜய்

சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மறுதிறப்பு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு அதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் மணிமேகலையை எத்தனை வருடமாக எனக்கு தெரியுமா என்றால் அவர்களை எனக்கு தெரியாது, அவரின் கணவர் இறந்த போது நான் மருத்துவமனைக்கு டாடா ஏஸ் வாகனத்தில் அழைத்துச் சென்றேன். விபத்து நடந்த தேதி என்ன என்றால் 12.08.2016 ஆகும். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் மாலை சுமார் 7.00 மணி இருக்கும். விபத்து நடந்ததற்கும் எனக்கும் சுமார் 200 அடி தூரம் இருக்குமா என்றால் ஒரு 100 அடி தூரம் இருக்கும். விபத்து நடந்த போது நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்றால் எனது நண்பனை பார்க்க நான் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் பங்க் அருகில் நின்று கொண்டிருந்தேன். இந்த விபத்து நடந்து சத்தம் கேட்டபின்பு நான் நேரடியாக சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்த முருகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டதா என்றால் தலையில் அடிபடவில்லை காலில் அடிபட்டிருந்தது, காதில் இரத்தம் வந்தது.

2. இறந்து போன முருகன் விபத்தின்போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல அணிந்திருந்தார். விபத்து சம்மந்தமாக போலீஸார் என்ன விசாரித்தாக சொல்லியுள்ளது எந்த போலீஸார் என்றால் திருவேகம்பத்தூர் போலீஸார் ஆவர். என்னிடம் விசாரித்து கையெழுத்து எதுவும் வாங்கிக்கொண்டார்களா என்றால் கையெழுத்து வாங்கவில்லை பெயர் போன் நம்பர் வாங்கிக்கொண்டார்கள். நான் விபத்து சமயத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க

சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.